முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் தெ. கௌதம் சிகாமணி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, திருமதி கனிமொழி கருணாநிதி, கழக செய்தி / தொடர்பு தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், கவிஞர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி தான் எழுதி வெளியிட்ட "கலைஞர் காவியம் நூலினை வழங்கினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.

இலக்கியத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றி வரும்

ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு ஔவையார் விருது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கான சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிருவாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தமிழ்நாடு அரசால் "ஔவையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

அவ்வகையில், தமிழ்நாடு அரசின் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதிற்கு இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும், முன்னணி எழுத்தாளரான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை தனது வாழ்வனுபவங்களின் மூலம், சாதி மற்றும் பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையையும் அநீதிகளையும் எடுத்துக்காட்டும் பல்வேறு நூல்களை ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா எழுதியுள்ளார். இவற்றில் கருக்கு, சங்கதி, வன்மம், மனுசி போன்ற நாவல்களும், குசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் போன்ற சிறுகதை தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

இவர் எழுதிய "கருக்கு" என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000ஆம் ஆண்டின் 'கிராஸ் வேர்ட்புக்' விருதை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அவர் எழுதிய "கருக்கு" என்ற புதினம் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும், "வன்மம்" என்ற புதினம் ஆங்கிலம், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளிலும், "சங்கதி" என்ற புதினம் பிரஞ்சு, ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும், "குசும்புக்காரன்", "ஒரு தாத்தாவும் எருமையும்" போன்ற சிறுகதை தொகுப்புகளிலிருந்து சில கதைகள் ஆங்கிலம், ஹிந்தி, உருது, கன்னடம், குஜராத்தி ஆகிய மொழிகளிலும், மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவின் இலக்கியப் பணியினை பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர்சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலையில்

துறைமுகம் மேற்கு: கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - மேயர் பிரியா - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 12 -

காலம் உள்ளவரை கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குபகுதி தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணிச்செயலாளர், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் வழங்குகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞர்100, 91வது நிகழ்ச்சியாக உயரத்தின் திராவிடர் வேதம்! ஒலிக்கட்டும் உதயகீதம்! எனும் தலைப்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா 13.06.2024, வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, முன்னிலையில் பி.கே. மூர்த்தி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் கழக இளைஞர் அணிச்செயலாளர், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் !

திருவள்ளூர், ஜூன் 12;

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக் கொள்ள வேண்டுமென மாவட்ட திமுக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் வருமாறு:

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர். கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்லும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்றதலைவர்கள், பேரூராட்சி மன்றதலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மானாமதுரையில் பள்ளி மாணவர்களுக்கு

இலவசநோட்டு பாடப்புத்தகங்கள் - தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை. ஜூன் 12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கல்குறிச்சி அரசு ஆரம்ப பள்ளியில் தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா இலவச பாடநோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச பாட நோட்டுப் புத்தகங்களை வழங்கியும், எண்ணும் எழுத்தும் நிகழ்ச்சியினை துவங்கி வைத்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ .நகர மன்ற தலைவர். எஸ். மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, வட்டார கல்வி அலுவலர்கள் அ.பால்ராஜ், அமிஸ்தா பானு, ஒன்றிய செயலாளர்கள் துரை. ராஜாமணி. எம். அண்ணாத் துரை, கடம்ப சாமி, ஒன்றிய கவுன்சிலர் ராதா சிவச்சந்திரன் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி, உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

தலைமைச் செயலகத்தில் (11.6.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் புதிய அறிவிப்புகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, காவல்துறை தலைவர் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சாமுண்டீஸ்வரி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி, தாட்கோ பொது மேலாளர் (நிர்வாகம்) ப.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்.எஸ்.பாரதி, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வாழ்த்துகிறார்கள்!

37வது வட்ட பகுதி பிரதிநிதி கே.ஏழுமலை இல்ல மணவிழா வரவேற்பு!

டாக்டர். கலாநிதிவீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன், எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜூன் 12-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி- 37-வது வட்ட கழக பகுதி பிரதிநிதி கே.ஏழுமலை இல்ல மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (12.6.2024) மாலை 6.30 மணியளவில் சென்னைக் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை சர்மா நகர் பேருந்துநிலையம் அருகில் அமைந்துள்ள "அல்-தாஜ் மஹால்"-லில் நடை பெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பெரம்பூர் வட்டப்பகுதி செயலாளர் அ.முருகன் -37வது வட்ட கழக செயலாளர் கே.இ. செந்தமிழ் அரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வரவேற்புரை அ.ஜியாவுத்தீன், எம்.அருசக்கரவர்த்தி, வி.சிவகுமார், ஆர். விஷ்வநாதன், என்.விக்டோரியா, எம்.சண்முகம், எம். ஆர்.வேலு, பி.டி.சி.குமார், எ.ஜெயக்குமார், எ.விஜயகுமார், ஜி.விக்னேஷ்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், க.ஜெயராமன், இரா.கருணாநிதி, இரா. நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், ப.மதிவாணன், மாமன்ற உறுப்பினர் ஜே.டில்லிபாபு மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில்

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. முன்னிலை! படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூன் 12 -

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணியின் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், கழக பொருளாளர் டி.ஆர். பாலு பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் சுற்றுப்பயணம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை முன்னிலையில் இன்று ஊராட்சி வாரியாக நடைபெறுகிறது.

இன்று (12.6.2024 - புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் கொல்லச்சேரி ஊராட்சியிலும், மாலை 4.15 மணியளவில் சிக்கராயபுரம் ஊராட்சியிலும், மாலை 4.30 மணியளவில் கொழுமணிவாக்கம் ஊராட்சியிலும், மாலை 4.45 மணியளவில் மலையம்பாக்கம் ஊராட்சியிலும், மாலை 5.15 மணியளவில் சிறுகளத்தூர் ஊராட்சியிலும், மாலை 5.30 மணியளவில் நந்தம்பாக்கம் ஊராட்சியிலும், மாலை 6.00 மணியளவில் பூந்தண்டலம் ஊராட்சியிலும், மாலை 6.15 நல்லூர் பகுதியிலும், மாலை 6.30 மணியளவில் அமரம்பேடு ஊராட்சியிலும், இரவு 7.00 மணியளவில் சோமங்கலம் ஊராட்சியிலும், இரவு 7.15 மணியளவில் நடுவீரப்பட்டு ஊராட்சியிலும், இரவு 7.30 மணியளவில் வரதராஜபுரம் தர்க்காஸ் பகுதியிலும் ,

கழகப் பொருளாளர் டி..ஆர்.பாலு நன்றி தெரிவிக்க வருகை தருகிறார்.

அது சமயம் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் திரளாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி தந்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்

குன்றத்தூர் நகரில் டி.ஆர்.பாலு எம்.பி. நன்றி தெரிவிக்கிறார்!

நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 12 -

குன்றத்தூர் நகரக் கழகச் செயலளார் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் நகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று (12.06.2024) காலை 7 மணியளவில் இந்தியா கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர், கழக பொருளாளர் டி..ஆர். பாலு பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சி காலை 6.30 மணியளவில் திருநாகேஸ்வரர் ஆலயம் அருகில் இருந்து புறப்படும்.

எனவே கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பான முறையில் வரவேற்பு அளித்திடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு குன்றத்தூர் நகரமன்ற தலைவர், குன்றத்தூர் நகர செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி எட்டியம்மன் நகர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்குத் திரும்பும் 1 முதல் 12 ஆம் வரை பயிலும் மாணவ மாணவி களுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்று மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் பாட புத்தகம் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி மற்றும் சர்க்கரை பொங்கல் வழங்கினார் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி பொறுப்பாளர் சண் பிரகாஷ் ஆவடி வடக்கு பகுதி கழகச் செயலாளர் பேபி சேகர் மாமன்ற உறுப்பினர் துளசிங்கம் சக்திவேலன் மற்றும் பெ.வினோத், கா.மு.ஜான் உள்பட பலர் உள்ளனர்.